# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்
## திருவள்ளுவராண்டு 2042 மார்கழித் திங்கள் 12-ஆம் நாள்

2012-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27–ஆம் தேதி (27.12.2012) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

\- - -

## நடவடிக்கைகள்

## 30.10.2012ம் தேதிய சாதாரணக் கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்

**1.** இம்மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளில் முதல் கட்டமாக கருங்கல்பாளையம் காவேரி ரோடு பெண்கள் மேநிலைப்பள்ளியில் பயிலும் 193 பேருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் அளித்தல் பணிக்கு இம்மாமன்றம் தனது 30.07.12ம் தேதிய தீர்மானம் எண்.167-ல் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 17.08.12ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு-

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு மாணவருக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1. | சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன் | 345- |
| 2. | காம்பிரிட்ஜ் ஸ்போக்கன் அண்டு ஸ்கில்ஸ் டெவலப்மென்ட் அகாடமி | 349- |

இரு நிறுவனத்தாரும் ஒப்பந்தப்புள்ளி வைப்புத் தொகையினை மாநகராட்சிக் கருவூலத்தில் செலுத்தியுள்ளனர். வந்துள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு- வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ரூ.345/-க்கு (ஒரு மாணவருக்கு) கொடுத்துள்ள மெசர்ஸ் சி.எஸ்.சி கம்ப்யூட்டர் எடிகேசன், ஈரோடு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருப்பதால் அதனை மாமன்றம் ஏற்கலாம். **இ1/3933/12**

**336. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான மின் உதிரி பொருட்களை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 08.11.2012 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. தற்போது தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான உதிரிபொருட்களில் 40 வாட்ஸ் குழல் விளக்கு மற்றும் 36 வாட்ஸ் சி.எப்.எல். மின்விளக்குகளுக்கான உதிரி பொருட்கள் குறைந்த அளவே இருப்பில் உள்ளது. மேலும் மழையின் காரணமாக 40 வாட்ஸ் குழல் விளக்கு மற்றும் 36 வாட்ஸ் சி.எப்.எல் தெருவிளக்குகள் அதிகப்படியான அளவில் பழுதடைந்துள்ளன. எனவே

மேற்கண்டவாறு பழுதடைந்துள்ள தெருவிளக்குகளை சரி செய்யவும், தெருவிளக்குகளை பராமரிக்கவும் உடனடி தேவையான 40 வாட்ஸ் குழல் விளக்கு மற்றும் 36 வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு உதிரிபாகங்களை ரூ.1,48,525.00 செலவில் "The Erode District Consumers Co-op wholesale stores Ltd., Erode" கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்க பயன்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று "The Erode District Consumers Co-op wholesale stores Ltd., Erode" நிறுவனத்திடமிருந்து தெருவிளக்கு உதிரி பொருட்களை வாங்கி பயன்படுத்தியமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **இ1/5564/12**

**337. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு (மேற்கு) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (2011-2012) ஈரோடு மாநகராட்சி மண்டலம்-2 வார்டு எண்.18 ஈ.பீ.பி. நகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் பணி செய்ய ரூ.10,00,000/-க்கு 29.06.12 தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் பணமாக மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விவரம் பின்வருமாறு:-

திரு. எஸ். கோவிந்தராஜ் 0.03 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு

மேற்படி பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். கோவிந்தராஜ் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். இ1/1210/2012 நாள் 02.07.2012 ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இயலுமா? என கேட்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 03.07.2012ம் தேதிய கடிதத்தில் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை உயர்ந்து விட்டதால் ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். கோவிந்தராஜ் (10.03 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் திரு. எஸ். கோவிந்தராஜ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க மாமன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் திரு. எஸ். கோவிந்தராஜ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/2667/2012-5**
3.

**338. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் வார்டு எண்.46 முதல் 50 வரை மற்றும் வார்டு எண்.60 உட்பட்ட பகுதிகளுக்கும் வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையம் மூலமாக குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு அதன்பின் மூலப்பாளையம் நீருந்து நிலையம், கொல்லம்பாளையம் வீட்டு வசதி வாரிய நீருந்து நிலையம் மற்றும் கொல்லம்பாளையம் லோட்டஸ் மருத்துவமனை அருகிலுள்ள நீருந்து நிலையம், ஆகியவற்றிலுள்ள மின்மோட்டார் மூலமாக பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து ஆற்று நீர் முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி-1ல் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பம்பிங் செய்யப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அங்கிருந்து மண்டலம்-3க்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதிவாரியம் திட்டப்பகுதி 1,2,3 ஆகிய பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்ட நீரேற்று நிலையங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்தில் தற்போது அதிகப்படியான நேரம் மின்தடை ஏற்படுவதினால் பொதுமக்களுக்கு சரியான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலைய மின் இணைப்புகளுக்கு தமிழ்நாடு மின்வாரியம் மூலம் தனியாக உயர்அழுத்த மின்பாதை (Separate Feeder Line) அமைத்து மின்விநியோகம் பெறவேண்டியுள்ளது. மேலும் கீழ்கண்ட நீரேற்று நிலையங்களில் கீழ்கண்ட விபரப்படி புதிய ஜெனரேட்டர் செட்களை உடனடியாக பொருத்த வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | மண்டலம்-4ல் மூலப்பாளையம் நீருந்து நிலையத்தில் 140 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் பொருத்துதல் | ரூ.19.00 இலட்சம் |
| 2. | மண்டலம்-4ல் கொல்லம்பாளையம் வீட்டு வசதி வாரிய நீருந்து நிலையத்தில் 180 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் பொருத்துதல் | ரூ.22.00 இலட்சம் |
| 3. | மண்டலம்-4ல் கொல்லம்பாளையம் லோட்டஸ் மருத்துவமனை அருகிலுள்ள நீருந்து நிலையத்தில் 82.5 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் பொருத்துதல் | ரூ.13.50 இலட்சம் |
| 4. | மண்டலம்-3ல் முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி-1ல் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 82.5 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் பொருத்துதல் | ரூ.13.50 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 68.00 இலட்சம் |

எனவே மேற்கண்ட இடங்களில் ரூ.68.00 இலட்சம் உத்தேச செலவில் புதிய ஜெனரேட்டர் செட் அமைக்கவும், வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்திற்கு தமிழ்நாடு மின்வாரியம் மூலம் தனியாக உயர்அழுத்த மின்பாதை அமைக்க ஆகும் செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட புதிய ஜெனரேட்டர்களை அமைக்கும் பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/5598/12**

**339.** **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் மாநகராட்சிக்குச் சொந்தமான மின்கம்பங்களில் விளம்பர பலகை வைத்து கொள்ள அனுமதித்து நில வாடகை 2007 முதல் 2011 வரை வசூல் செய்யப்பட்ட தொகையிலிருந்து 13 சதவீதம் சேவை வரி ரூ.1,21,339- செலுத்துமாறு உதவி ஆணையர் கலால் மற்றும் சுங்கவரி அலுவலர் அவர்களிடமிருந்து 23.12.11ந் தேதி கடிதத்தில் கோரப்பட்டு மேற்படித் தொகை மாநகராட்சியால் 06.02.12ல் செலுத்தப்பட்டு விட்டது. மேற்படி அறிவிப்பு உரிய காலத்தில் கிடைக்காமல் தாமதமாக கிடைக்கப் பெற்று மேற்படித் தொகை செலுத்தப்பட்டது. காலதாமதத்திற்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் மேற்காணும் தொகைக்கு அபராத தொகை செலுத்த வேண்டுமெனவும், அதற்கு மேல் முறையீடு செய்து கொள்ள வேண்டும் என உதவி ஆணையர் கலால் வரி துறை அவர்கள் தெரிவித்துள்ளார். மேல் முறையீடு செய்யவும், சேலம் ஆணையர் மத்திய கலால் மற்றும் சுங்கவரித்துறை அலுவலகத்தில் மாநகராட்சி சார்பாக நேரில் ஆஜராகி உரிய பதில் அளிக்கவும் திரு. ஆர். முரளிதரன், பி.காம்.,எப்.சி.ஏ., பட்டயக் கணக்காளர் அவர்களை நியமிக்கவும் அதற்காக ஆகும் செலவுத் தொகையினை ஏற்கவும் மாமன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- மாமன்றம் அனுமதிக்கலாம். **இ5/8402/11**

**340. அனுமதிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சயில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி இயக்க திட்டம் 2012-13ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான 100 எண்ணிக்கை டம்பர் பின்களை ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 26.10.12 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்டது. மேலும் பெறப்பட்ட 6 எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக டம்பர்பின் ஒன்றுக்கு ரூ.36,789.00 விலைவிகிதத்தில் மொத்தம் ரூ.36,78,900/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த (M/s Sri Selliamman Steel Industries, Erode) நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மாமன்ற தீர்மானம் எண்.271 தேதி 08.11.12ல் ஏற்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மேற்கொண்டும் கூடுதலாக டம்பர் பின்கள் தேவைப்படுவதால் மேற்கண்ட மதிப்பீட்டில் மீதம் இருக்கும் ரூ.9,21,100/- தொகையில் 25 எண்ணிக்கை டம்பர் பின்களை மேற்படி (M/s Sri Selliamman Steel Industries, Erode) நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் ரூ.9,19,725/- மதிப்பில் அந்நிறுவனத்திடமிருந்து வாங்கி பயன்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 25 எண்ணிக்கை கூடுதல் டம்பர்பின்களை வாங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **இ1/10031/11**

**341. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7.** ஈரோடு மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற அபிவிருத்தி இயக்க திட்டம் 2012-13ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தேவையான 100 எண்ணிக்கை தள்ளுவண்டிகளை ரூ.19.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்குவதற்கு 26.10.12 தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி பெறப்பட்டது. மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று எண்ணிக்கை ஒப்பந்தப்புள்ளிகளில் தள்ளுவண்டி ஒன்றுக்கு ரூ.15,460/-ஐ விலைவிகிதத்தில் மொத்தம் ரூ.15,46,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த (M/s R. Madhusudhanan, Chennai) நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி மாமன்ற தீர்மானம் எண்.309 தேதி 08.11.12ல் ஏற்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இம்மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு மேற்கொண்டும் கூடுதலாக தள்ளுவண்டிகள் தேவைப்படுவதால் மேற்கண்ட மதிப்பீட்டில் மீதம் இருக்கும் ரூ.3,54,000/- தொகையில் 22 எண்ணிக்கை தள்ளுவண்டிகளை ரூ.3,40,120/- மதிப்பில் மேற்படி (M/s R. Madhusudhanan, Chennai) நிறுவனம் வழங்கியுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தில் இந்நிறுவனத்திடமிருந்து வாங்கி பயன்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று 22 எண்ணிக்கை கூடுதல் தள்ளுவண்டிகளை வாங்க அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ1/10031/11

**342.** **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**8.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவையான உதிரிப் பொருள்களை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்க 30.10.12ம் தேதிய 219ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட உதிரிப் பொருட்களை வாங்க 08.11.2012ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

1. M/s. Sri Bharath pipe Corporation, Erode
2. M/s. Swamyjee Engineers, Chennai
3. M/s.Sri Magnum Agencies, Erode

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 மற்றும் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையை செலுத்தியும் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளனர்.

வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Sri Magnum Agencies, Erode நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி டேவணித் தொகையை வழங்கி, ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை செலுத்தவில்லை. எனவே இந்நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியானது ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி தகுதி பெறவில்லை.

எனவே தகுதி பெற்றுள்ள இரண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள விலை விகிதங்கள் பின்வருமாறு.

| Sl. No | Materials | Qty | M/s. Sri Bharath pipe Corporation, Erode | | M/s. Swamyjee Engineers, Chennai | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate per each in Rs. | Amount in Rs. | Rate per each in Rs. | Amount in Rs. |
| 1 | 40W FTL bulb | 4000 | 41.90 | 167600.00 | 41.90 | 167600.00 |
| 2 | 40W FTL Choke | 2000 | 149.00 | 298000.00 | 151.00 | 302000.00 |
| 3 | 40W FTL Starter | 4000 | 8.10 | 32400.00 | 8.70 | 34800.00 |
| 4 | 40W FTL side holder | 1000 | 7.20 | 7200.00 | 12.40 | 12400.00 |
| 5 | 36W CFL bulb | 400 | 117.00 | 46800.00 | 339.00 | 135600.00 |
| 6 | 36W CFL choke | 800 | 147.00 | 117600.00 | 266.00 | 212800.00 |
| 7 | 24W T5 bulb | 500 | 133.00 | 66500.00 | 133.00 | 66500.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | PVC insulation tape | 800 | 10.00 | 8000.00 | 19.00 | 15200.00 |
| 9 | 70W SVL bulb | 80 | 219.00 | 17520.00 | 366.00 | 29280.00 |
| 10 | 70W SVL Choke | 40 | 630.00 | 25200.00 | 575.00 | 23000.00 |
| 11 | 150W SVL bulb | 100 | 320.00 | 32000.00 | 492.00 | 49200.00 |
| 12 | 150W SVL Choke | 50 | 986.00 | 49300.00 | 900.00 | 45000.00 |
| 13 | 250W SVL Bulb | 200 | 320.00 | 64000.00 | 532.00 | 106400.00 |
| 14 | 250W MH Bulb | 50 | 1080.00 | 54000.00 | 1094.00 | 54700.00 |
| 15 | 250W SVL/MH Choke | 200 | 1080.00 | 216000.00 | 1335.00 | 267000.00 |
| 16 | 70/150/250W SVL ignitors | 400 | 108.00 | 43200.00 | 117.00 | 46800.00 |
| 17 | 250 SVL bulb holder | 100 | 87.00 | 8700.00 | 200.00 | 20000.00 |
| 18 | 3/20 Aluminium coil | 80 | 360.00 | 28800.00 | 493.00 | 39440.00 |
| 19 | 7/20 Aluminium coil | 40 | 640.00 | 25600.00 | 770.00 | 30800.00 |
| 20 | 7/16 Aluminium coil | 12 | 1080.00 | 12960.00 | 1231.00 | 14772.00 |
| 21 | 400W MH lamp | 35 | 1080.00 | 37800.00 | 1229.00 | 43015.00 |
| 22 | 400W MH choke | 16 | 2150.00 | 34400.00 | 1806.00 | 28896.00 |
| 23 | 11W CFL bulb | 50 | 75.00 | 3750.00 | 180.00 | 9000.00 |
| 24 | 11w CFL choke | 15 | 126.00 | 1890.00 | 155.00 | 2325.00 |
| 25 | 40 amps MCB | 200 | 220.00 | 44000.00 | 160.00 | 32000.00 |
| 26 | 32 amps Single Phase contactor | 40 | 1980.00 | 79200.00 | 133.00 | 5320.00 |
| | Total | | | 1522420.00 | | 1793848.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1ல் மற்றும் 7-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு இரண்டு நிறுவனங்களும் ஒரே விலை விகிதத்தை வழங்கியுள்ளனர். மேலும் வ.எண்.2 முதல் 6 வரை, வ.எண்.8, 9, 11, 13 முதல் 21 வரை மற்றும் 23, 24ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு M/s. Sree Bharath pipe Corporation, Erode நிறுவனமும், வ.எண்.10, 12, 22, 25 மற்றும் 26-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு M/s. Swamyjee Engineers, Chennai நிறுவனமும் குறைந்த விலை விகிதம் வழங்கியுள்ளனர்.

எனவே மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த மொத்த தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருந்த M/s. Sree Bharath pipe Corporation, Erode நிறுவனத்திடம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதங்களை மேலும் குறைத்து வழங்க இயலுமா என 14.11.2012 தேதியிட்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக கேட்கப்பட்டதில் இந்நிறுவனம் வ.எண்.1, 4 மற்றும் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு முறையே ரூ.41.00, ரூ.7.00, ரூ.132.00-ஐ விலை விகிதமாக குறைத்து வழங்க 16.11.2012 தேதியிட்ட கடிதம் வாயிலாக சம்மதம் தெரிவித்துள்ளது.

எனவே வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 9 வரை, வ.எண்.11, 13 முதல் 21 வரை, வ.எண்.23, 24-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு M/s. Sree Bharath pipe Corporation, Erode நிறுவனம் ரூ.12,86,020/- மொத்த தொகைக்கு வழங்கியுள்ள குறைந்த விலை விகிதங்கள் மற்றும் வ.எண்.10, 12, 22, 25 மற்றும் 26ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு M/s. Swamyjee Engineers, Chennai நிறுவனம் ரூ.1,34,216/- மொத்த தொகைக்கு வழங்கியுள்ள விலை விகிதங்கள் ஆகியவை உள்ளூர் சந்தை விலைக்கு ஏற்புடையதாக உள்ளதால் அவற்றினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட குறைந்த விலை விகிதங்களை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Sree Bharath pipe Corporation, Erode நிறுவனம் மற்றும் M/s. Swamyjee Engineers, Chennai நிறுவனம் ஆகியவை வழங்கியுள்ள குறைந்த விலை விகிதங்களை ஏற்க மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. மேற்கண்ட பொருட்களை வாங்குவதற்கு தற்போது மொத்தம் ரூ.1420236/- தொகை மட்டுமே செலவினம் ஆகிறது என்பதால் மதிப்பீட்டுத் தொகையில் மீதமுள்ள ரூ.579764/- தொகையில் மேற்கண்ட உதிரிபொருட்களில் தேவைப்படும் பொருட்களை அவசியத்தை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி குறைந்த விலை விகிதங்களில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து வாங்கி பயன்படுத்தவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/5185/12**

**343.** **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**9.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான பன்னீர்செல்வம் பூங்கா, பெரியார் நகர் பூங்கா (புனல் வடிவ நீர் தொட்டி) மற்றும் சூரம்பட்டி நால்ரோடு அருகில் உள்ள பெரியார் நகர் பூங்கா ஆகிய மூன்று பூங்காக்களை இம்மாமன்ற தீர்மான எண்.828, 829 நாள் 24.11.2010-ன் அனுமதியின் பேரில் மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு இளைஞர் சக்தி இயக்கம், ஈரோடு நிறுவனத்தார் மூலம் 14.12.2010 முதல் இலவசமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் மேற்கணட இளைஞர் சக்தி இயக்கம், ஈரோடு நிறுவனத்தார் தமது 19.11.12ம் தேதிய கடிதத்தில் மேற்கண்ட மூன்று பூங்காக்களையும் பராமரிக்க இயலவில்லை என தெரிவித்துள்ளார்கள். ஆகவே மேற்கண்ட மூன்று பூங்காக்களை பராமரித்தல் பணிக்கு வழங்கப்பட்ட உத்தரவினை இரத்து செய்வதற்கும் மேலும் தற்போது தினசரி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் மூன்று பூங்காக்களை இலவசமாக பராமரிப்பு செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பூங்காக்களை பராமரிப்பு செய்தல் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தினசரி நாளிதழ் மூலம் விளம்பரம் செய்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலம் மூன்று பூங்காக்களை இலவசமாக பராமரிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/10663/10**

**344.** **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**10.** **(1)** வீட்டு வசதி மற்றும் நகர்புற (UD4 (1) ) வளர்ச்சி துறை அரசாணை (M.S) எண். **234** நாள் **30.10.12**ல் விதி மற்றும் வழிகாட்டி தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் **1971** பிரிவு **113–**.C கட்டிடங்களுக்கு விதிவிலக்கு அளித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் விதிவிலக்கு கட்டணம் வசூலித்தல் வழிகாட்டு முறைகள் **2012** மற்றும்

**(2)** வீட்டு வசதி மற்றும் நகர்புற (UD4 (1)) வளர்ச்சித்துறை அரசாணை எண். (M.S) **235** நாள் **30.10.12**ல் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் **1971** பிரிவு **1113**C விதிவிலக்கு அளிக்கும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்தல் மற்றும் கட்டணங்கள் வசூலித்தல் விதிகள் **2012.** மேற்படி அரசாணைகளில் **01.01.2007**க்கு முந்தைய காலங்களில் அனுமதியின்றி மற்றும் அனுமதிக்கு

மாறாக 50 சதவிகித விதிகளுக்கு கீழ் முரணாக கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விதிவிலக்கு அளித்தல் தொடர்பான வழிகாட்டி முறைகள் தொகுத்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மாமன்றம் பதிவு செய்யலாம். **இ3/5667/12**

**345. பதிவு செய்யப்பட்டது.**

**11.** ஈரோடு மாநகராட்சியில் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு ப்ளக்ஸ் பேனர்கள் 150 எண்ணிக்கையில் தயாரித்து வழங்க ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு–15ன் கீழ் பணி மேற்கொள்ள பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விவரம் வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | நிலா ஆப்செட், ஈரோடு | 19,600– |
| 2. | ஸ்பை பிரிண்டர்ஸ், ஈரோடு | 20,100– |
| 3. | சங்கவ் கம்யூட்டர்ஸ், ஈரோடு | 18,000– |

ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு–15ன் கீழ் இப்பணியை மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி 18,000/– வழங்கிய திரு.சங்கவ் கம்யூட்டர்ஸ், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை மேற்கொண்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.18,000/– மேற்படி நிறுவனத்திற்கு வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **எச்1/2490/12**

**346. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**12.** இம்மாநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள மாநகராட்சி தொடக்க விழா நினைவு தூணில் நான்கு பக்கங்களிலும் கடிகாரம் பொருத்தப்பட்டு வடிவமைக்கப்பட்டது. மேற்படி கடிகாரங்கள் தற்போது பருவநிலை காரணமாக அடிக்கடி பழுது ஏற்பட்டு கடிகாரம் கீழே விழுந்து விடுகிறது. எனவே நினைவு தூணில் ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட கடிகார அமைப்பினை அப்புறப்படுத்திவிட்டு நான்கு பக்கங்களிலும் மாநகராட்சி சின்னம் பொருத்துவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/5830/12**

**347. அனுமதிக்கப்பட்டது,**

**13.** ஈரோடு மாநகராட்சி பகுதி முழுமைக்கும் ஊராட்சி கோட்டையிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் தனிக்குடிநீர் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரித்தளிக்க நியமிக்கப்பட்ட ஆலோசகர் M/s TWIC நிறுவனத்திற்கு மேற்படி திட்ட அறிக்கையின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கும் பொருட்டு, தேவைப்படும் கூடுதல் விவரங்களை காசிபாளையம், சூரம்பட்டி, வீரப்பன் சத்திரம் மற்றும் பெரியசேமூர் ஆகிய நான்கு நகராட்சி பகுதிகளுக்கு மட்டும் குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ஏற்கனவே ஜீன்–2011ல் தயாரித்தளித்த M/s பிஸ்னர், சென்னை நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட வேண்டியுள்ளது.

எனவே மேற்படி கூடுதல் விவரங்களை பெற்று இத்திட்ட இறுதி அறிக்கை M/s TWIC மூலம் தயாரித்து வழங்க கூடுதலாக ரூ.2,75,750/– கட்டணம் வழங்கவும் மற்றும் மேற்படி நான்கு நகராட்சிகளுக்கான குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு ஜீன் 2011–ல் தயாரித்துள்ள விரிவான திட்ட அறிக்கையிலிருந்து தற்போதைய நிலைக்கேற்ப திருத்திய கூடுதல் விவரங்கள் தயாரித்து வழங்கக் கூடுதல் கட்டணம் ரூ.15.00 இலட்சம் + 12.3 சதவீதம் வரியுடன் வழங்க M/s பிஸ்னர் நிறுவனம் கோரியதற்கு மேற்படி இரண்டு கட்டணங்களை ஈரோடு மாநகராட்சி நிதியிலிருந்து வழங்க தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 34913/2007/WS1 நாள் 19.11.12ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து இத்திட்ட இறுதி அறிக்கை தயார் செய்வது தொடர்பாக 05.12.12 அன்று இம்மாநகராட்சியில் M/s TWIC, Chennai மற்றும் FICHTNER, Chennai ஆகிய ஆலோசகர்களுடன் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் இத்தனிக் குடிநீர் திட்டத்தின் இறுதி அறிக்கை தயாரிக்க தேவையான கூடுதல் விவரங்களை M/s பிஸ்னர் நிறுவனம் மூலம் தயாரித்து வழங்கி அதன்பிறகு வழங்கப்படும் விவரங்களைக் கொண்டு M/s TWIC நிறுவனம் இறுதி அறிக்கை தயாரித்தளிப்பது மிகுந்த காலதாமதம் ஏற்படும் என்பதால் அதனை தவிர்க்கும் பொருட்டு M/s பிஸ்னர் நிறுவனம் தயாரித்து வழங்க வேண்டிய கூடுதல் விவரங்களை M/s TWIC நிறுவனம் மூலம் தயாரித்துக் கொள்ள மேற்படி இரு ஆலோசகர்களும் ஒப்பு கொண்டுள்ளார்கள். இதற்கான கட்டணத் தொகை ரூ.15.00 இலட்சத்திலிருந்து TWIC நிறுவனம் ரூ.50,000/– குறைத்து வழங்கவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 28.09.10 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் மேற்படி இரண்டு திட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து ஒரே அறிக்கையாக தயாரிக்கும் TWIC நிறுவனத்திற்கு ஒருங்கிணைப்பு கட்டணம் (Integration fees) ரூ.2.50 லட்சம் வழங்கப்பட வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளபடியால் அந்தத் தொகையும் தற்போது TWIC நிறுவனத்திற்கு வழங்க வேண்டியுள்ளது.

எனவே மேற்படி தனிக்குடிநீர் திட்டத்திற்கான இறுதி அறிக்கையை TWIC மூலம் தயாரிக்கவும் மற்றும் கூடுதல் ஆய்வுப்பணிக்காக TWIC நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.2,75,750/–ஐ வழங்கவும் மற்றும் இறுதி அறிக்கைக்கு முன்னால் நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகளின் தற்போதைய நிலவரப்படி தேவைப்படும் கூடுதல் விவரங்கள் தயாரிக்கும் பணிக்கான ஆலோசகர் கட்டணம் ரூ.14.50 இலட்சம் + 12.3 சதவீதம் வரியுடன் சேர்த்து M/s TWIC நிறுவனத்திற்கு வழங்கவும் மேலும் மேற்படி இரண்டு திட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து இறுதி அறிக்கை தயாரிக்கும் பணிக்கான ஒருங்கிணைப்பு கட்டணம் (Integration fees) ரூ.2.50 இலட்சம் TWIC நிறுவனத்திற்கு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. தலைமை ஆலோசகர் TWIC அவர்களின் கடிதம் எண். TWIC/Erode/59/162/12 நாள் 05.12.12ல் கூடுதல் ஆய்வுப் பணிக்கான கட்டணம் ரூ.2,75,750/–யை தற்போது செலுத்த கோரியுள்ளதால் மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி தொகை ரூ.275750/–ஐ TWIC நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **இ2/17285/03**

**348. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**14.** ஈரோடு மாநகராட்சி பகுதி முழுமைக்கும் உள்ள தெருவிளக்கு பராமரிப்பில் மின் சிக்கன நடவடிக்கைகள் தொடர்பான பணிகளை ரூ.1715.00 இலட்சம் உத்தேச மதிப்பில் மேற்கொள்ளவும், இப்பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அன்னாரின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் ஈரோடு மாமன்றம் தனது 30.07.2012ம் தேதிய 171ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் 07.12.2012 தேதியன்று வரப்பெற்றுள்ளது.

தற்போது ஈரோடு மாநகராட்சியில் 01.04.2012 முதல் புதியதாக பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகள், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2012–13ல் அனுமதிக்கப்பட்டுள்ள புதிய தெருவிளக்குகளுக்கு தேவையான தெருவிளக்கு பிட்டிங்குகள் மற்றும் மின்சிக்கனம் மேற்கொள்வது தொடர்பான கூடுதல் கருவிகள் ஆகியவற்றை பொருத்துவதற்கும் மற்றும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட மேற்படி மதிப்பீட்டிற்கும் சேர்த்து தற்போதைய நிலவரப்படியான விலைவிகிதத்திற்கு திருத்தப்பட்டதில் மதிப்பீட்டுத் தொகை ரூ.1887.00 இலட்சம் வரப்பெற்றுள்ளது.

மேலும் IUDM 2011-12 & 2012-13ல் அனுமதியளிக்கப்பட்டுள்ள புதிய தெருவிளக்குகள் அமைத்தல் பணிகளில் கம்பம் நிறுவுதல், மின் கேபிள் அமைத்தல், தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மின்கம்பம் அமைக்க தொகை செலுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டுத் தொகை ரூ.385.00 இலட்சம் ஆகும்.

எனவே மின்சிக்கனம் தொடர்பான பணிகளுக்கான உத்தேச திருத்திய மதிப்பீடு ரூ.1887.00 இலட்சத்திற்கு முதன்மைதர அனுமதி பெறவும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2011–12 மற்றும் 2012–13ல் அனுமதிக்கப்பட்ட புதிய தெருவிளக்குகள் அமைக்கும் பணிகளில் கம்பம் நிறுவுதல், மின்கேபிள் அமைத்தல் மின்வாரியத்திற்கு கட்டணம் செலுத்துதல் உள்ளிட்ட பணிகளுக்கு ஆகும் உத்தேச மதிப்பு ரூ.385.00 இலட்சத்திற்கு முதன்மைதர அனுமதி பெறவும் மற்றும் மேற்கண்ட பணிகளுக்கான மொத்த தொகையை அரசு மானியமாக வழங்கவும் கோரி அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று முதன்மைதர அனுமதி பெற அரசுக்கு கருத்துரு அனுப்ப அலுவலக மேல்நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/2249/12**

**349. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**15.** ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக முகமை அவர்களின் கடிதம் ந.க.எண்.1255/2012/அ3 நாள் 15.10.2012ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து (2012–2013) ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.21 குமலன்குட்டை முருகேசன் நகர் காலனிப் பகுதியில் சூரம் டெக்ஸ் டையிங் பேக்டரி இருந்த இடத்தில் புதியதாக சமுதாயக்கூடம் அமைத்தல் பணிக்கு ரூ.25,00,000/– லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து 16.11.2012 தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் இருவரும் வங்கி வைப்புத் தொகைக்கான பத்திரத்தினை இணைத்துள்ளார்கள். எனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | M/s S.V & Co | –0.02 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு. |
| 2. | M/s கே.எம்.பழனிச்சாமி அண்டு கோ | 0.14 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம். |

எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s S.V. & Co., (0.02 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று M/s S.V. & Co., அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்த M/s S.V. & Co அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/5310/12–1**

**350. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான பெரியார் நகர் பூங்கா (புனல் வடிவ நீர்த் தொட்டி) மற்றும் சூரம்பட்டி நால்ரோடு அருகிலுள்ள பெரியார் நகர் மாநகராட்சி பூங்காக்களை இலவசமாக பராமரிப்பு செய்து தருவதாக ஈரோடு நடுநகர் அரிமா சங்கம் அவர்கள் தமது 10.12.2012ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். மேற்படி பூங்காக்களை பராமரிப்பதற்கென போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் கீழ்கண்ட மாநகராட்சியின் நிபந்தனைகளுக்குட்பட்டு ஈரோடு நடுநகர் அரிமா சங்கம் அவர்கள் மூலம் 3 ஆண்டுகளுக்கு மேற்படி பூங்காக்களை இலவசமாக பராமரிப்பு செய்ய அனுமதி வழங்குவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நிபந்தனைகள்–**

1. பெரியார் நகர் பூங்காக்கள் பொதுமக்களின் உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படல் வேண்டும்.
2. சட்டவிரோதமான காரியங்கள் எதுவும் நடைபெற கண்டிப்பாக அனுமதிக்கக்கூடாது.
3. பூங்காவினுள் மாநகராட்சியின் அனுமதியின்றி எவ்வித கட்டிடங்களும் அமைக்கக்கூடாது.
4. பூங்காவினை பராமரிப்பது தொடர்பாக மாநகராட்சி/அரசு நிர்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.
5. பூங்காவினுள் ஏதேனும் சேதாரங்கள் ஏற்படின் அதற்கு முழுப்பொறுப்பேற்று சரி செய்து தரப்படல் வேண்டும்.
6. பூங்காவினுள் பணியாற்றும் பணியாளர்களுக்கு பணியின்போது ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படின் மாநகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.
7. பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு பூங்காவினுள் எவ்வித இடையூறுமின்றி நல்ல முறையில் பூங்காவினை பராமரிக்கப்படல் வேண்டும்.
8. பொதுமக்கள் பூங்காவினை பார்வையிட ஏதுவாக காலை 8.00 மணி முதல் இரவு 8.30 மணி வரை திறந்து வைத்திருக்க வேண்டும். (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமை உட்பட)

9. பூங்காவினை பராமரிக்கும் காலத்தில் மின் கட்டணத்தினை மாநகராட்சி மூலம் செலுத்தப்படும்.
10. பூங்காவினை உபயோகப்படுத்தும் பொதுமக்கள் புகார் ஏதும் தெரிவிக்க வேண்டின் புகார் புத்தகம் ஒன்று பராமரிக்கப்படல் வேண்டும்.
11. பிற்காலத்தில் பூங்காவினை தாங்கள் எந்த சூழ்நிலையிலும் சொந்தம் கொண்டாட உரிமை கோரக்கூடாது.
12. பூங்காவிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளிடம் நுழைவுக் கட்டணம் ஏதும் வசூலிக்கக் கூடாது.
13. பூங்கா பராமரிக்கும் பணியினை தங்களிடமிருந்து எந்த ஒரு காலத்திலும் யாதொரு முன் அறிவிப்புமின்றி ரத்து செய்ய ஆணையருக்கு முழு அதிகாரமுண்டு.

அலுவலகக் குறிப்பு–
1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பெரியார் நகர் பூங்காக்களை ஈரோடு நடுநகர் அரிமா சங்கம் அவர்கள் மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு 3 ஆண்டுகளுக்கு இலவசமாக பராமரிப்பு செய்வதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். **இ1/10663/10**

**351. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**17.** இம்மாநகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. ஆர்.எம். புவனேஸ்வரி என்பவர் பதவி உயர்வில் முன்னுரிமை கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஈரோடு மாநகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை நடத்த இம்மாநகராட்சி நிலை வழக்கறிஞர் திரு. எம். ராஜா மதிவாணன் அவர்களுக்கு வழக்கேற்பிதழ் வழங்கவும் இவ்வழக்கு தொடர்பாக ஏற்படும் செலவுத் தொகையினை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம். **பி2/5421/12**

**352. அனுமதி வழங்கப்பட்டது.**

**18.** இம்மாநகராட்சிக்கு எதிராக சென்னை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடரப்படும் வழக்குகளை நடத்த வழக்கறிஞராக நியமனம் செய்யக்கோரி சென்னை வழக்கறிஞர் திரு. ஏ. அப்துல் சலீம் என்பவர் விண்ணப்பித்துள்ளார்.

இதுவரை மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்படும் வழக்குகளை நடத்த மாநகராட்சி சார்பில் யாரும் நியமனம் செய்யப்படவில்லை. திரு. ஏ. அப்துல்சலீம் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் அரசு சிறப்பு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறார். எனவே ஈரோடு மாநகராட்சி சார்பாக சென்னை தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குகளை நடத்த திரு. ஏ. அப்துல் சலீம் அவர்களை நியமனம் செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம். **பி2/5884/12**

**353. அனுமதி வழங்கப்பட்டது,**

**19.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மாநகராட்சி ஆரம்ப பள்ளிகள் மற்றும் நடுநிலை பள்ளிகளுக்கு மட்டும் இம்மாநகராட்சியின் மூலம் மின்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் தலைமை ஆசிரியர், இரயில்வே காலனி மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.164/2012 நாள் 14.11.12—ல் இரயில்வே காலனி மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிக்கு மின்கட்டணம் மாநகராட்சி மூலம் செலுத்தக் கோரியுள்ளார். மேலும் நாளது தேதி வரை பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக நிதியிலிருந்து மேற்படி மின்கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது. தற்போது அரசு அறிவிப்பின்படி பள்ளி மாணவ மாணவிகளிடம் கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாத நிலையில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தில் போதுமான நிதி இல்லாததால் பள்ளியின் மின்கட்டணத்தை செலுத்த இயலாத நிலை உள்ளது. மேலும் மேற்படி பள்ளி தொடர்ச்சியாக அனைத்து தேர்வு மையமாக செயல்படுவதால் வகுப்பறைகளுக்கு போதிய மின்விளக்குகள், மின்விசிறிகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது எனவும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளின் பாதுகாப்பு பள்ளி வளாகம், அதன் சுற்றுப்புறம் மற்றும் வாகனங்கள் பராமரித்தல் பின்பற்ற வேண்டி நடைமுறைகளுக்கான அரசாணை (நிலை) எண்.270 பள்ளிக்கல்வி (எக்ஸ்—2)துறை நாள் 22.10.12—ல் கண்ட அரசாணையில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>குடிநீர்—</u>

1. பாதுகாப்பான குடிநீர் தரப்பட வேண்டும். குடிநீர் சேமித்து வைக்கும் தொட்டிகள் தூய்மையான முறையில் இருத்தல் வேண்டும்.
2. மேலும் 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற வீதத்தில் குடிநீர் குழாய்கள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
3. பாத்திரங்கள் கழுவ, கை, கால்கள் கழுவ 20 மாணவர்களுக்கு 1 குழாய் என்ற அளவில் தண்ணீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

<u>கழிப்பிடங்கள்—</u>

1. 20 மாணவர்களுக்கு 1 சிறுநீர் கழிப்பறை மற்றும் 50 மாணவர்களுக்கு 1 மலக்கழிப்பறை என்ற அளவில் போதிய இடைவெளியில் கழிப்பறைகள் காற்றோட்டம்/போதிய வெளிச்சத்துடன் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவை அன்றாடம் தூய்மையாக பேணப்பட வேண்டும். கிருமி நாசினி தெளித்து ஆரோக்கியமான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.
2. கழிப்பறைகள் தண்ணீர் குழாய் வசதியுடன் கூடியதாக இருத்தல் வேண்டும்.

எனவே மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இம்மாநகராட்சி மேல்நிலை பள்ளிகளில் கழிப்பிடங்களை தூய்மையாக பராமரிப்பதற்கும் வகுப்பறையில் காற்றோட்ட வசதி மற்றும் போதிய வெளிச்சத்திற்காகவும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணத்தை செலுத்த மேற்படி பள்ளிகளில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தாலும் இம்மாநகராட்சி மூலம் மாநகராட்சி மேல்நிலை பள்ளிகளின் மின்கட்டணங்களை தொடர்ச்சியாக செலுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு — மாநகராட்சி மேல்நிலை பள்ளிகளில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் இம்மாநகராட்சி மூலம் மாநகராட்சி மேல்நிலை பள்ளிகளின் மின்கட்டணங்களை தொடர்ச்சியாக செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம். **இ2/3694/12**

**354. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

20. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி–1ல் உள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 82.5 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் ஒன்றினை ரூ.13.50 இலட்சம் உத்தேச செலவில் பொருத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியினை 19.11.2012 தேதியன்று பெற்று 12.12.2012 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | M/s Ever Bright Engineering Company, Chennai | Rs. 1129300.00 |
| 2. | M/s Dowell Associates, Chennai | Rs. 1289400.00 |
| 3. | M/s Kumar Associates, Chennai | Rs. 1685800.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.

வரிசை எண்.2–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Dowell Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை.

வரிசை எண்.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Kumar Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் முழுமையாக வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே இந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி தகுதி பெறவில்லை.

எனவே ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை முழுமையாக வழங்கி ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை வழங்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/5598/12**

**355. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

21. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட மூலப்பாளையம் நீருந்து நிலையத்தில் 140 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் ஒன்றினை ரூ.19.00 இலட்சம் உத்தேச செலவில் பொருத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியினை 19.11.2012 தேதியன்று பெற்று 12.12.2012 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | M/s Ever Bright Engineering Company, Chennai | Rs. 1589400.00 |
| 2. | M/s Dowell Associates, Chennai | Rs. 1818300.00 |
| 3. | M/s Kumar Associates, Chennai | Rs. 2369900.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.

வரிசை எண்.2—ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Dowell Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை.

வரிசை எண்.3—ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Kumar Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் முழுமையாக வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே இந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி தகுதி பெறவில்லை.

எனவே ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை முழுமையாக வழங்கி ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

**1.** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**2.** மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை வழங்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/5598/12**

**356. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்—4க்குட்பட்ட கொல்லம்பாளையம் வீட்டுவசதி வாரிய நீருந்து நிலையத்தில் 180 கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் ஒன்றினை ரூ.22.00 இலட்சம் உத்தேச செலவில் பொருத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியினை 19.11.2012 தேதியன்று பெற்று 12.12.2012 தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு—

| | | |
|---|---|---|
| 1. | M/s Ever Bright Engineering Company, Chennai | Rs. 1838320.00 |
| 2. | M/s Dowell Associates, Chennai | Rs. 2104000.00 |
| 3. | M/s Kumar Associates, Chennai | Rs. 2755800.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.

வரிசை எண்.2–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Dowell Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை.

வரிசை எண்.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Kumar Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் முழுமையாக வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே இந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி தகுதி பெறவில்லை.

எனவே ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை முழுமையாக வழங்கி ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை வழங்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/5598/12**

**357. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**23.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட கொல்லம்பாளையம் லோட்டஸ் மருத்துவமனை அருகிலுள்ள நீரூந்து நிலையத்தில் **82.5** கே.வி.ஏ ஜெனரேட்டர் செட் ஒன்றினை ரூ.**13.50** இலட்சம் உத்தேச செலவில் பொருத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியினை **19.11.2012** தேதியன்று பெற்று **12.12.2012** தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | M/s Ever Bright Engineering Company, Chennai | Rs. 1129300.00 |
| 2. | M/s Dowell Associates, Chennai | Rs. 1289400.00 |
| 3. | M/s Kumar Associates, Chennai | Rs. 1685800.00 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கியும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது.

வரிசை எண்.2–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Dowell Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை வழங்கியுள்ளது. அதே சமயம் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை முழுமையாக ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்கவில்லை.

வரிசை எண்.3–ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s Kumar Associates, Chennai நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் டேவணித் தொகையினை ஒப்பந்தப்புள்ளியுடன் வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை ஒப்பந்தப்புள்ளியுடன் முழுமையாக வழங்காமலும் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே இந்நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி தகுதி பெறவில்லை.

எனவே ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை முழுமையாக வழங்கி ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் குறைந்த விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்ற அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்தப்புள்ளி தகுதிக்கான சான்றுகளை வழங்கி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/s Ever Bright Engineering Company, Chennai நிறுவனத்தின் விலைவிகிதம் உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளதால் அதனை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/5598/12**

**358. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**24.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.19 வீட்டு வசதி வாரியம் எல் டைப் (அர்த்தனாரி கவுண்டர் வீட்டிற்கு எதிரில்) உள்ள பூங்கா இடத்தில் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி எல் டைப்பில் 200 குடியிருப்புகள் மற்றும் நந்தி நகர், காந்தி நகர், சின்னகவுண்டர் லே அவுட் ஆகிய பகுதிகளில் குடியிருப்பு அதிகமாக உள்ளது. அப்பகுதி மக்கள் மற்றும் குழந்தைகளின் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கிற்காக புதிய பூங்கா அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 லட்சத்திற்கு மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் ஒப்பந்தப்புள்ளிகோரி மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம். **இ1/6101/12**

**359. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**25.** மாமன்ற கூட்ட தீர்மான எண்.254 நாள் 08.11.2012ல் அங்கீகரிக்கப்பட்டதின் பேரில் ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட வார்டு எண்.18 ஈ.பி.பி. நகர் நடுநிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம் கட்டுதல் பணிக்கு ரூ.23,00,000/–க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 12.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் காசோலையாக இணைத்துள்ளார். எனவே தகுதியான ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு–

திரு. எஸ். கோவிந்தராஜன்     0.01 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு.

எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். கோவிந்தராஜன் (0.01 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு. எஸ். கோவிந்தராஜ் (0.01 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/3450/12**

**360. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**26.** மாமன்ற கூட்ட தீர்மான எண்.261 நாள் 08.11.2012ல் அனுமதி வழங்கப்பட்டதின்பேரில் ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட மல்லிகை நகர் நீர் உந்து நிலையத்திலிருந்து வசந்த நகர் மேல்நிலைத் தொட்டி வரை 200 எம்.எம். பி.வி.சி 10 கிலோ மெயின்லைன் அமைத்தல் பணிக்கு ரூ.22,00,000/–க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 12.12.2012 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் வங்கி வைப்புப் பத்திரமாக இணைத்துள்ளார். எனவே தகுதியான ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு–

| | |
|---|---|
| திரு. ஆர். சிவக்குமார்,<br>ஸ்ரீ ஆர்யா ஏஜென்சீஸ் | 0.02 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு |

எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். சிவக்குமார், ஸ்ரீஆர்யா ஏஜென்சீஸ் (0.02 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதிக்கலாம்.

2. மேற்படி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.ஆர். சிவக்குமார். ஸ்ரீ ஆர்யா ஏஜென்சீஸ் (0.02 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/3452/12**

**361. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**27.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட சம்பத் நகர் பழைய மின்மோட்டார்களுக்கு பதிலாக இரண்டு எண்கள் 40 கு.வே. திறனுள்ள மின்மோட்டார்கள் மற்றும் பம்புகள், 5 எச்.பி திறனுள்ள வேக்கம் (Vaccum Pump) ஆகியவற்றை புதியதாக வாங்கி பொருத்தும் பணி ரூ.16.80 லட்சத்திற்கு மாமன்றம் தீர்மான எண்.222 நாள் 30.10.2012 அனுமதி வழங்கியதை தொடர்ந்து 12.12.2012 தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர்கள் வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துள்ளனர்.

எனவே பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளையும் மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு–

| | |
|---|---|
| M/s ஹரீஷ் இன்ஜியரிங் | 4.11% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு |
| M/s நேஷனல் அண்டு கோ | 1.09% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு |

எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s ஹரீஷ் இன்ஜியரிங் (4.11% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மாமன்ற பொருள் வரைவு ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணி குடிநீர் பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி M/s ஹரீஷ் இன்ஜியரிங் (4.11% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். **இ2/3239/12–1**

**362. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II-க்குட்பட்ட பகுதியில் வார்டு எண்.22 சம்பத் நகர் மெயின்சாலை போக்குவரத்து நிறைந்த சாலையாகவும், நசியனூர் செல்லும் சாலையையும், பெருந்துறை செல்லும் சாலையையும் இணைக்கும் மிகமுக்கியமான சாலையாகவும் உள்ளது. பாதாள சாக்கடை பணிகள் சமீபத்தில் முடிக்கப்பட்டு இச்சாலை மிகவும் மோசமானநிலையில் உள்ளது. இதனால் பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே அவசர அவசியம் கருதி மேற்படி சாலையினை மாநகராட்சி நிதியின்கீழ் புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.96.00 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/1738/12**

**363. அனுமதி வழங்கப்பட்டது.**

**29.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-IIIக்குட்பட்ட வார்டு எண்.32ல் பெருந்துறை மெயின் சாலையிலிருந்து வீரப்பம்பாளையம் பைபாஸ் சாலைக்கு செல்லும் சாலை பாதாள சாக்கடை திட்டத்தின்கீழ் முடிவடைந்துள்ளது. மேற்கண்ட சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இப்பகுதியில் அதிகமான கனரக வாகனங்கள் மற்றும் சிறு வாகனங்கள் சென்று வருவதால் போக்குவரத்திற்கும் மற்றும் பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இச்சாலை பெருந்துறை மெயின்சாலை வீரப்பம்பாளையம் பைபாஸ் சாலை இணைக்கும் முக்கியமான சாலையாக உள்ளதால் இந்த இணைப்பு சாலையை சீரமைப்பது அவசியமாகிறது. எனவே மேற்படி சாலையை சீரமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.18.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசியம் கருதி, மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/4125/12**

**364. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**30.** ஈரோடு மாநகராட்சி ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் காவல்துறைக்கு பயன்பாட்டிற்கான கட்டிடம் (Police Out Post) ராயல் தியேட்டர் வடக்குபக்கம் அமைந்துள்ளது. காவல்துறையின் இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதுடன், போக்குவரத்தை கண்காணிக்க போதுமான அளவிற்கு பார்க்கும் படியாக இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தை இடித்து அகற்றிவிட்டு பேருந்து நிலைய வளாகத்தின் மேற்கு பகுதி வணிக வளாகத்திற்கு தெற்குப்பகுதியில் தங்கள் சொந்த செலவில் புதிதாக கட்டிக்கொள்ள காவல்துறையினர் அனுமதி கோரியுள்ளனர். அவர்கள் கோரியுள்ளபடி மேற்குபகுதி வணிக வளாகத்தின் தென்புறம் காவல்துறையின் சொந்த செலவில் 10'x20'–க்குமிகாமல் Police Out Post கட்டிக் கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.'

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/6102/12**

**365. அனுமதி வழங்கப்பட்டது.**

**31.** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (மா.ந.2) துறை அரசு ஆணை (நிலை) எண்.78 நாள். 25.05.2008-ன்படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் தெளிவுரை ந.க.எண்.62795/2009/ஆர்.3 நாள். 08.01.10-ன்படியும், ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான ஓராண்டு உரிம இனங்களை 01.04.2013 முதல் 31.03.2016 முடிய மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலத்தில் விடுவதற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் தயாரிக்கப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அடங்கிய பொது ஏல அறிக்கை மாமன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏல இனங்கள் | உரிமம் முடிவடையும் தேதி |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | சேர்மன் ஆர்.கே.வெங்கடசாமி சாலையில் நேதாஜி தினசரி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (அதன் பின்புறம் ஆர்.கே.வி.சாலையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி வணிக மையக் கட்டிடம் செல்லார், தரைத்தளம் முதல் மூன்றாம் தளம் முடிய மற்றும் இந்த கட்டிடத்தை சுற்றியுள்ள மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்டுள்ள காலியிடமும் மற்றும் ஆர்.கே.வி.சாலையில் முதல் மாடியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் நீங்கலாக.) | 31.03.2012 |
| 2. | பாரதி வீதியில் பெருந்தலைவர் காமராஜர் மாநகராட்சி சிலம்பரான் குட்டை தினசரி சந்தையில் மேற்கு பகுதியில் மட்டும் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 3. | நேதாஜி சாலையில் உள்ள ஹெமிங்வே வாரச்சந்தை, தங்கபெருமாள் வீதி மற்றும் நீல்கிரீஸ் சந்து பகுதியில் வாரச்சந்தைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 31.03.2012 |
| 4. | சேர்மன் ஈ.கே.முகமது அப்துல் கனி சந்தை வளாகத்தில் உள்ள பழைய கட்டிடங்கள் திறந்த வெளியில் அமைக்கப்பட்டு இருக்கும் கடைகள் மற்றும் அதை சுற்றியுள்ள திறந்த வெளியை உபயோகித்துக் கொள்ளும் உரிமத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். (40 இரும்பு பெட்டிக் கடைகள், தார்சுகடைகள் 12, திறந்த வெளி கடைகள் 72, வைப்பறைகள் 7, அலுவலக அறை மிதிவண்டி நிலையம் நீங்கலாக) | 31.03.2012 |

| | | |
|---|---|---|
| 5. | வீரப்பன்சத்திரம் மண்டலம்-1 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி மார்க்கெட்<br>1) வீரப்பன்சத்திரம் பவானி ரோடு<br>வ.உ.சி. பூங்கா வேர் ஹவுஸ் முதல் லட்சுமி தியேட்டர் ஓடை வரை 2) அசோகபுரம்<br>3) நெரிக்கல்மேடு 4) வைராபாளையம்<br>5) கிருஷ்ணம்பாளையம் 6) தெப்பக்குள வீதி<br>7) காவேரி ரோடு ஆகிய அனைத்து பகுதிகள்<br>8) சத்தி ரோடு வடக்கு பகுதி டி.வி.எஸ். கம்பெனி அருகில் வீரப்பன்சத்திரம் பழைய நகராட்சி எல்லை முதல் பஸ் ரூட் நெ.16 திரும்பும் பாதை பகுதி (முனியப்பன் கோவில் எதிர்புறம்) ஆகிய பகுதிகள் குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 6. | பெரியசேமூர் மண்டலம்-2 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி மார்க்கெட்<br>1) பெரியவலசு<br>2) ஆண்டவர் வீதி (அண்ணா தியேட்டர் பகுதிகள்)<br>3) காசியண்ண வீதி பெரியவலசு ரோடு (பழைய வீரப்பன்சத்திரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகள்)<br>4) சம்பத்நகர் (உழவர் சந்தை உட்புறம் நீங்கலாக)<br>5) நசியனூர் ரோடு விவேகானந்தர் சாலை இருபுறமும் (அம்மு மெஸ் முதல் நாச்சாயி டீக்கடை வரை)<br>6) சத்தி ரோடு தெற்கு பகுதி (கண்ணன் ஆயில் மில் முதல் முனியப்பன் கோவில் வரை)<br>7) பெருந்துறை சாலை வடக்குப் பகுதி மட்டும் (சுதா ஹாஸ்பிட்டல் முதல் பாரி நகர் வரை) | 31.03.2015 |
| 7. | சூரம்பட்டி மண்டலம்-3 பகுதிக்குட்பட்ட சாலையோர தினசரி சந்தையில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்<br>1) நசியனூர் ரோடு விவேகானந்தர் சாலை (காந்தி நகர் முதல் வீரப்பம்பாளையம் பிரிவு முடிய இருபுறமும் உள்ள அனைத்து பகுதிகள்)<br>2) ஈரோடு மாநகராட்சி புதிய வார்டு எண் 32-க்குட்பட்ட அனைத்து பகுதிகள் | 31.03.2015 |
| 8. | வீரப்பன்சத்திரம் மண்டலம்-1 பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட உரம்புத் தோட்டத்தில் மேல்நிலைத் தொட்டி அருகில் (10'x10' தார்சு கடைகள்-19) வாரச்சந்தை நடத்திக் கொள்ளும் உரிமம் | ஏல நடவடிக்கையில் உள்ளது |
| 9. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்-II பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலை ஓரங்களில் நடைபெறும் சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 10. | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள தினசரி மார்க்கெட்டிற்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம் | 31.03.2015 |
| | **<u>பேருந்து நிலையம்</u>** | |
| 11.. | வைஸ் சேர்மன் டி.வீரபத்திரசாலையில் அமைந்துள்ள சுதந்திர தின வெள்ளிவிழா மாநகராட்சிப் பழைய பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 31.03.2012 |
| 12. | ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் பேருந்து புறப்படும் நேரம் மற்றும் விளம்பரங்களை தொலைக்காட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் | 31.03.2012 |
| 13. | பேருந்து நிலையத்தில் உள்ள மாநகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 31.03.2012 |

| | | |
|---|---|---|
| 14. | பேருந்து நிலைய பொருள் பாதுகாப்பு அறையில் பயணிகள் பொருட்கள் வைப்பதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 15. | பேருந்து நிலைய இரண்டாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.5-க்கும் 6-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.1) | 31.03.2012 |
| 16. | பேருந்து நிலையம் 2-ம் பிளாட்பாரத்தில் "4x4" அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (பூக்கடை எண்.2) | 31.03.2015 |
| 17. | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.12-க்கும் 13-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.3) | 31.03.2012 |
| 18. | பேருந்து நிலைய மூன்றாம் பிளாட்பாரத்தில் வடக்கு தெற்காக தூண் எண்.16-க்கும் 17-க்கும் இடையே உள்ள பிளாட்பாரம் காலியிடத்தில் 4'x4' அளவில் பூ வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.4) | 31.03.2012 |
| 19. | பேருந்து நிலைய கிழக்குப்புற பிளாட்பாரம் எண்.6-ன் கட்டண கழிப்பிடம் அருகில் ஸ்டோர்கேசிலிருந்து தூண் எண்.3-க்கும் 4-க்கும் இடையில் 4'x4' அளவில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்யும் உரிமம் (கடை எண்.5) | 31.03.2012 |
| | **<u>கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் குளியல் அறை</u>** | |
| 20. | பேருந்து நிலையத்தில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்திலுள்ள கட்டண கழிப்பிடம் மற்றும் குளியல் அறைகளுக்கு கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் | 31.03.2015 |
| 21. | பேருந்து நிலையத்தில் 2 மற்றும் 3-வது பிளாட்பாரங்களில் உள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 31.03.2012 |
| 22. | பேருந்து நிலையத்திலுள்ள 5,6 மற்றும் 7-வது பிளாட்பாரங்களில் அமைந்துள்ள கழிப்பிடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 31.03.2012 |
| 23. | பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள கழிப்பிடம் மற்றும் குளியல் அறை கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 31.03.2012 |
| 24. | காவேரி ரோட்டிலுள்ள (நேதாஜி மார்க்கெட்) கழிப்பிடக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 31.03.2015 |
| 25. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.8 சின்னவலசு மாரியம்மன்கோவில் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 26. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.19 மாணிக்கம்பாளையம் பள்ளிக்கூடம் அருகில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 27. | வார்டு எண்.18 ஈ.பி.பி. நகர் மண்டலம்-II பெரிய சேமூர் அலுவலகம் எதிரில் உள்ள கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 28. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 எம்.ஜி.ஆர். நகர் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 29. | மண்டலம்-II பெரிய சேமூர் வார்டு எண்.17 கனி ராவுத்தர் குளம் பகுதி கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 30. | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதியில் 2-ம் நெம்பர் பஸ் நிறுத்தம் அருகில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 31. | குரங்கு குட்டை பகுதியில் உள்ள கழிப்பிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் (பெண்கள் மற்றும் ஆண்கள்) | 31.03.2012 |

| | | |
|---|---|---|
| | **<u>சைக்கிள் மற்றும் இரண்டு சக்கர மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடங்கள், ஆட்டோ, கார், டாக்சி நிறுத்துமிடங்கள்</u>** | |
| 32. | பேருந்து நிலைய வணிக வளாக செல்லார் பகுதி சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 33. | பேருந்து நிலையத்தில் உள்ள மினி பேருந்து நிலையம் கீழ்தளத்தில் (செல்லார் பகுதி) சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 34. | நேதாஜி ரோடு புதிய வணிக வளாகத்தில் தரைத்தளப் பகுதியில் (செல்லார்) மோட்டார் வாகனம் மற்றும் மிதிவண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2014 |
| 35. | இம்மாநகராட்சி பேருந்து நிலையத்தின் வடபுறம் விசிடிவி சாலையின் தென்புறம் சுற்றுச்சுவரின் உள்ளே மாநகராட்சியால் அமைக்கப்பட்டுள்ள சுமார் 188x34 ச.அடி நீள அகலம் உள்ள சிமெண்ட்கூரை ஷெட் உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2014 |
| 36. | வ.உ.சி.பூங்கா மிதிவண்டி நிலையத்தில் சைக்கிள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 37. | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேண்டில் ஆட்டோக்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 38. | பேருந்து நிலையத்திற்குள் வடபுறம் விசிடிவி சாலை பக்கவாட்டில் அமைந்துள்ள கார் ஸ்டேண்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 39. | காந்திஜி வீதியில் உள்ள மாநகராட்சி டாக்சி ஸ்டேண்டில், கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 40. | நேதாஜி சாலை புதிய வணிக வளாகம் பிரப்சாலை பார்த்தாற்போல் உள்ள திறந்த வெளி வாகனம் நிறுத்துமிடத்தில் நான்கு சக்கர வாகனம் நிறுத்தி கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் | புதிய இனம் |
| 41. | லூம் வேர்ல்டு வணிக வளாகம் திறந்த வெளி வாகனம் நிறுத்துமிடத்தில் நான்கு சக்கர வாகனம் நிறுத்தி கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம் | புதிய இனம் |
| | **<u>வ.உ.சி.பூங்கா</u>** | |
| 42. | வ.உ.சி.பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| 43. | வ.உ.சி. சிறுவர் அறிவியல் பூங்காவில் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2012 |
| | **<u>ஆடுவதைக்கூடம்</u>** | |
| 44. | மாநகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் (Slaughter House) கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 31.03.2014 |
| | **<u>பலன் தரும் மரங்கள்</u>** | |
| 45. | மண்டலம்-2 ஈரோடு நெடுஞ்சாலை கிராமப்புற உட்கோட்ட எல்லைக்குட்பட்ட பெரிய சேமூர் பழைய நகராட்சி எல்லைக்குட்பட்ட மரங்களின் மேல் பலனை அனுபவித்தல் (ஊட்டி-கோத்தகிரி-மேட்டுப்பாளையம்-சத்தி-கோபி-ஈரோடு சாலை கி.மீ. 160/6- 159-2. மற்றும் 159/2-156-2) | 31.03.2012 |
| 46. | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட கவுண்டச்சிபாளையம் தென்னைமர பலன்தரும் மரங்கள் மற்றும் தலைமை நீரேற்று நிலைய தென்னை மர பலன் தரும் மரங்கள் ஆகிய குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 31.03.2015 |
| 47. | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட ஒண்டிக்காரன் பாளையம் மற்றும் வில்லரசம்பட்டி பள்ளி மற்றும் சானார்பாளையம் மந்தையில் தென்னைமரம் பலன்தரும் மரங்கள் குத்தகை அனுபவிக்கும் உரிமம் | 31.03.2015 |

| | | |
|---|---|---|
| 48. | பெரியசேமூர் மண்டலம்-II பகுதிக்குட்பட்ட கங்காபுரம் பகுதியில் உள்ள தென்னை மர பலன்தரும் மரங்கள் குத்தகை உரிமம் (தென்னைமரம் 31 எண்ணிக்கை) | 31.03.2015 |
| 49. | பீளமேடு கிராமத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு வாங்கப்பட்ட நிலத்தில் உள்ள பலன்தரும் மரங்களில் பலன் அனுபவிக்கும் உரிமம் | 31.03.2015 |
| | **மீன் கடை** | |
| 50. | மண்டலம்-1 பிராமண பெரிய அக்ரஹாரத்திற்குட்பட்ட பவானி மெயின் ரோட்டில் கிழபுறமுள்ள குடிநீர் மேல் தொட்டி அருகில் (6'x12' ஆஸ்பெஸ்ட்டாஸ் கடைகள்-8) மீன் கடை நடத்திக் கொள்ளும் உரிமம் | ஏல நடவடிக்கையில் உள்ளது |
| | **மீன் குட்டைகளில் மீன் பிடித்துக் கொள்ளும் உரிமம்** | |
| 51. | மண்டலம்-3 சூரம்பட்டி பகுதிக்குட்பட்ட முத்தம்பாளையத்தின் அருகில் உள்ள மீன் குட்டைகள் மற்றும் திண்டல் அருகில் உள்ள மீன் குட்டைகளில் மீன் பிடித்துக் கொள்ளும் குத்தகை உரிமம் | 31.03.2015 |
| 52. | பெரியசேமூர் மண்டலம்-II பகுதிக்குட்பட்ட கனிராவுத்தர் குளத்தில் மீன் பிடித்துக் கொள்ளும் உரிமம் | ஏல நடவடிக்கையில் உள்ளது |

மேற்காணும் குத்தகை இனங்களை பொது ஏல அறிக்கையில் சேர்த்து ஏலம் விடவும், ஏல அறிக்கையை ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு அச்சகத்தில் அச்சிடவும், குத்தகை இனங்களை பொது ஏலம் விடுவதற்கு தினசரி நாளிதழ்கள் மூலம் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத்தை ஏற்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரிசை எண்.34, 35 மற்றும் 44 ஆகியவற்றின் உரிமக்காலம் 31.03.2014 உடன் முடிவடைகிறது.
3) வரிசை எண்.2, 5, 6, 7, 9, 10, 14, 16, 20, 24, 30, 33, 46, 47, 48, 49 மற்றும் 51 ஆகிய குத்தகை இனங்களின் உரிமக்காலம் 31.03.2015-ல் முடிவடைவதால் மேற்படி இனங்களை தவிர்த்து மற்ற வரிசை எண்1, 3, 4, 8, 11, 12, 13, 15, 17, 18, 19, 21, 22, 23, 25, 26, 27, 28, 29, 31, 32, 36, 37, 38, 39, 40, 41, 42, 43, 45, 50, மற்றும் 52 ஆகியஇனங்களை பொது ஏல அறிக்கையில் சேர்த்து ஏலம் விட அனுமதி வழங்கலாம். **அ1/6100/12**

**366. வணக்கத்துக்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர் மற்றும் மண்டலத் தலைவர்கள் ஆகியோர் கொண்ட குழு அமைத்து மேற்படி குழுவின் பரிந்துரையின்பேரில் மறுபரிசீலனை செய்து மாமன்றத்திற்கு பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.**

**32. 3–வது மண்டலத்தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- கீழ்திண்டல் பகுதியில் உள்ள மயானத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மின்விளக்கு, குடிநீர் வசதி செய்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- பெரிய செங்கோடம்பாளையம் பகுதியில் உள்ள மயானத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் எரி மேடை, மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி செய்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**367. 3ஆவது மண்டலத் தலைவர் திரு.இரா.மனோகரன் அவர்கள் முன்மொழிய 2ஆவது மண்டலத் தலைவர் திரு. பி.கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**33. 35–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். தங்கவேல் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

கீழ்கண்ட அடிப்படை வசதிகளை ஈரோடு பழையபாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்கு செய்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- குடிநீருக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குழாய் இணைப்பு செய்து தருதல்.
- சுத்திகரிப்பு செய்யப்பட்ட குடிநீர் வசதி செய்தல்.
- கை மற்றும் தட்டங்களை கழுவுவதற்கு தண்ணீர் குழாய் அமைத்தல்.
- கழிவறைகளுக்கு குழாய்கள் மூலம் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல்.
- பள்ளியின் மேற்கூரை பழுது மற்றும் சுற்றுச்சுவர்களை உயரப்படுத்திக் கொடுத்தல்.
- புதிதாக சமையலறை கட்டிக் கொடுத்தல்.

**368. 35ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். தங்கவேல் அவர்கள் முன்மொழிய 32ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.வி.பி.இளங்கோ அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இடம்- ஈரோடு** **மேயர்,**

**நாள் 27.12.2012** **ஈரோடு மாநகராட்சி**

# ஈரோடு மாநகராட்சி

# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

## திருவள்ளுவராண்டு 2042 மார்கழித் திங்கள் 12-ஆம் நாள்

2012-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27–ஆம் தேதி (27.12.2012) வியாழக் கிழமை பகல் 12.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசர கூட்டநடவடிக்கைகள்.

- - -

## நடவடிக்கைகள்

**1.** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்–1ல் வார்டு எண்.3 நீதித்துறைக் காலனி பகுதியில் புதியதாக பூங்கா அமைத்தல் பணி மேற்கொள்ள ரூ.12,00,000–க்கு மாமன்றம் தனது தீர்மான எண்.292 நாள் 08.11.2012–ல் அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து, இப்பணிக்கு 13.12.2012–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்பு நோக்குகையில் திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ் மதிப்பீட்டைக் காட்டிலும் (-0.02%) குறைவானதான விலைவிகிதம் கொடுத்துள்ளார். மேலும் ஒப்பந்தப்புள்ளியுடன் 1 சதவீத டேவணித் தொகையினை மாநகராட்சி கருவூலகத்தில் ரொக்கமான செலுத்தியுள்ளார்.

திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக ந.க.எண்.2625/2012/இ1 நாள் 14.12.2012–ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதாலும் மற்றும் கட்டிட பொருள் விலை ஏற்றம் மற்றும் வேலை ஆட்கள் கூலி ஏற்றத்தால் ஏற்கனவே கொடுத்துள்ள விலை விகிதத்தை மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தனது 14.12.2012–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்ற ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட(-0.02%) குறைவானதாக கொடுத்துள்ள திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட (-0.02%) சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் ஏ.ஆர்.கே. கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/2625/12**

**369. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சி வீரப்பன் சத்திரம், சம்பத் நகர் பகுதி–2 தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஈரோடு வீட்டு வசதி பிரிவில் (ERODE HOUSING UNIT/TNHB) பழைய புல எண். 393/B புதிய புல எண். 413/11–ல் 44.33 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் மனைப்பிரிவு செய்ய நகர்ஊரமைப்பு துறையினரால் L.P./R (C.N)228/83–ல் திருத்திய மனைப்பிரிவு ஒப்புதல் பெறப்பட்டு இதில் பொது உபயோக இடங்கள், பூங்காக்கள் மற்றும் திறவிடங்களுக்காக 10 சதவீதம் 4.43 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்போதைய வீரப்பன் சத்திரம் பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களுக்கு தான சாசனம் மூலம் 23.08.1990–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பத் நகர் பகுதி–2 மனைப் பிரிவில் நீதிமன்ற வளாகத்தின் வடபுறம் ஒட்டி உள்ள பூங்காவிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 23,684 ச.அடி பரப்பளவு கொண்ட இடத்தில் உடனடி மத்யஸ்தம் செய்வதற்கு நீதிமன்ற கட்டிடம் (ADR CENTRE) கட்ட ஈரோடு முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் தனது D.NO.15330 நாள் 20.11.2012 தேதிய கடிதத்தில் கோரி உள்ளார். மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தனது ந.க.எண்.24406/2012(உ1) நாள் 05.12.2012 தேதிய கடிதத்தில் மேற்படி இடத்தினை நீதித்துறைக்கு உடனடி மத்யஸ்தம் செய்வதற்கு, நீதிமன்ற கட்டிடம் கட்ட (ADR CENTRE) பூங்கா இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி உள்ளார்.

1. அரசாணை (நிலை) எண்.730 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள் 14.04.1976ல் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிமையான நிலைகளை அவற்றின் எதிர்கால தேவைகளுக்காக தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அவற்றை விற்பனை, குத்தகை போன்றவை மூலம் நிலமாற்றம் செய்ய முழு தடை விதித்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. அரசாணை (நிலை) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.5)துறை நாள் 25.02.2000–ல் பத்தி–2ல்

(அ) நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்குத் தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value at the time) அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

மேற்படி விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் முடிவு செய்யலாம். **இ3/630/11**

**370. பூங்காவிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை நிலமாற்றம் செய்ய வேண்டாம் என மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**3.** ஈரோடு மாநகராட்சி, மண்டலம்–1 வீரப்பன் சத்திரத்தில் அலுவலக இடவசதி குறைவாக இருப்பதால் சூரியம்பாளையம் அலுவலக வளாகத்தில் உள்ள காலி இடத்தில் புதியதாக மண்டல அலுவலகம் கட்ட இம்மாமன்ற தனது தீர்மானம் எண். 237 நாள் 27.12.2011–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி மேற்படி காலியிடத்தில் மண்டல அலுவலகம் கட்ட ஆகும் உத்தேச செலவினம் ரூ.65.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு– அனுமதி வழங்கலாம். **இ1/2737/12**

**371. அனுமதி வழங்கப்பட்டது.**

**4.** இம்மாமன்ற கூட்ட தீர்மான எண்.107 நாள் 31.05.2012ல் அங்கீகரிக்கப்பட்டதின் பேரில் ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட காவேரி சாலையில் ஏற்கனவே உள்ள பழுதடைந்த ஆயுர்வேதிக் மருத்துவமனை கட்டிடத்தை அகற்றி புதிய ஆயுர்வேதிக் மருத்துவமனை கட்டுதல் பணிக்கு ரூ.12,00,000/–க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு 13.12.2012 அன்று மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித் தொகையை ஒப்பந்ததாரர் காசோலையாக இணைத்துள்ளார். எனவே தகுதியான ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு–

மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன் 4.90 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம்.

மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி (மதிப்பீட்டு விலைவிகிதத்தற்கு) கொடுத்துள்ள மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன் அவர்களுக்கு இவ்வலுவலக கடித எண். இ1/2670/2012 நாள் 17.12.2012ல் ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இயலுமா ? என கேட்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 18.12.2012ம் தேதிய கடிதத்தில் ஏற்கனவே கொடுத்த விலைவிகிதத்திலிருந்து அனைத்து இனங்களிலும் குறைத்து கொடுத்துள்ளார். குறைத்து கொடுத்த விலைவிகிதத்தை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம்.

மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன் 0.05 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு.

எனவே மேற்படி பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன் (0.05 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன் (0.05 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதிக்கலாம். **இ1/2670/12**

**372. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.44580/2012/ எம்.சி.எ.1 நாள். 01.11.2012 கடிதத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட ஈரோடு மாநகராட்சியானது நிர்வாக ரீதியாக நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதையடுத்து தமிழ்நாடு மாநகராட்சி பணி விதிகள் 1996–ன்படி நான்கு மண்டலங்களின் அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகத்திற்கு தேவையான பணியிடங்கள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் பணிபுரிந்து வரும் 313 பணியாளர்களை ஈர்த்துக் கொள்வது குறித்தான கருத்துருக்கள் சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளது.

அரசு ஆணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 27.05.1997–ல் 60 வார்டுகள் கொண்ட திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கு மைய அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட பணியிடங்களுக்கான அளவுகோலின் அடிப்படையில் 60 வார்டுகள் கொண்ட இம்மாநகராட்சியின் 4 மண்டல அலுவலகங்கள் மற்றும் மைய அலுவலகங்களுக்கு தேவையான பணியிடங்களுக்கான பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதன்படி 2560 பணியிடங்கள் தேவை. இதில் ஏற்கனவே ஈரோடு மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 1013 பணியிடங்கள் போக 1547 பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த 1547 பணியிடங்களில் 901 பணியிடங்கள் முதற்கட்டமாக ஈரோடு மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படும் பட்சத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட வீரப்பன் சத்திரம், பெரியசேமூர், சூரம்பட்டி, காசிபாளையம், ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், பி.பெ.அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் கங்காபுரம், திண்டல், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகளில் ஊதிய விகிதத்தில் பணிபுரியும் 313 பணியாளர்களை தகுதியான பணியிடங்களில் ஈர்த்துக் கொண்டது போக எஞ்சியுள்ள 588 பணியிடங்களை மட்டும் நிரப்பும் பட்சத்தில் மாநகராட்சியின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 49 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சிக்கு முதற்கட்டமாக 901 பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** முந்தைய ஈரோடு மாநகராட்சியுடன் வீரப்பன் சத்திரம், பெரியசேமூர், சூரம்பட்டி, காசிபாளையம், ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், பி.பெ,அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் கங்காபுரம், திண்டல், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகள் இணைக்கப்பட்டு 25.10.2011 முதல் 109.52 ச.கி.மீ. பரப்பளவு கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட மாநகராட்சியாக 60 வார்டுகள் கொண்டு நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மண்டல அலுவலகங்களுக்கென்று தனியாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத நிலையில் அளவுகோலின்படி 2560 பணியிடங்கள் தேவை. அன்றாட சுகாதார பணிகள், குடிநீர் விநியோகப்பணிகள், தெருவிளக்கு பராமரிப்பு பணிகள், திட்டப்பணிகள், சாலைப்பணிகள், வடிகால் பணிகள் வரி மற்றும் வரியில்லா இனங்கள் சம்பந்தப்பட்ட பணிகள் மற்றும் இதர அலுவலகப்பணிகள் போன்றவற்றினை உடனுக்குடன் மேற்கொள்ள அரசு ஆணை எண்.138

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள். 25.07.97–ல் மைய அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின் அடிப்படையில் இம்மாநகராட்சிக்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட 1013 பணியிடங்கள் போக 1547 பணியிடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த 1547 பணியிடங்களில் 901 பணியிடங்கள் முதற்கட்டமாக ஈரோடு மாநகராட்சிக்கு தோற்றுவிக்கப்படும் பட்சத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட வீரப்பன் சத்திரம், பெரியசேமூர், சூரம்பட்டி, காசிபாளையம், ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், பி.பெ,அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள் மற்றும் கங்காபுரம், திண்டல், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகளில் ஊதிய விகிதத்தில் பணிபுரியும் 313 பணியாளர்களை தகுதியான பணியிடங்களில் ஈர்த்துக் கொண்டது போக எஞ்சியுள்ள 588 பணியிடங்களை மட்டும் நிரப்பும் பட்சத்தில் மாநகராட்சியின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 49 சதவிகிதத்திற்கும் குறைவாகவே உள்ளது. எனவே ஈரோடு மாநகராட்சிக்கு முதற்கட்டமாக 901 பணியிடங்களை தோற்றுவிக்க அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வழியாக அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/8781/11**

**373. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வார்டு எண்.55ல் வளையக்கார வீதியில் அமைந்துள்ள மாநகராட்சி துவக்கப்பள்ளியில் (சிமெண்ட் பள்ளி) உள்ள பழைய வகுப்பறை கட்டிடத்தின் மேற்கூரையின் மேல் உள்ள தளம் பழுதடைந்து மழை காலங்களில் தண்ணீர் கசிவு ஏற்படுகிறது. மேலும் இரண்டு வகுப்பறைகளுக்கு கதவு மற்றும் ஜன்னல் இல்லாமல் உள்ளது. இதனால் இவ்வகுப்பறை கட்டிடத்தில் குழந்தைகளுக்கு பாடம் நடத்த முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மேற்கண்ட பழுதடைந்துள்ள வகுப்பறை கட்டிடத்தின் மேற்கூரை தளம் அமைக்கவும் மற்றும் பழைய பள்ளிக் கட்டிடங்களில் உள்ள சிறுபழுதுகளை சரி செய்து வர்ணம் பூசவும் உத்தேசிக்கப்பட்டு இதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/3142/12**

**374. அனுமதி வழங்கப்பட்டது,**

**7.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வெண்டிபாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வடிகட்டும் தொட்டி (Filter bed) அமைக்கப்பட்டு சுமார் 12 வருட காலம் ஆகிறது. இதனால் குடிநீர் வடிகட்டும் பொழுது சகதிகள் அதிகம் தேங்குவதால் குடிநீர் சரிவர வடிகட்டுவதில்லை. மேலும் குடிநீர் வடிகட்டும் நேரம் அதிகமாகிறது. இதன் காரணமாக போதுமான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கிடைப்பதில்லை. மேலும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் சீராக தேவையான அளவு வழங்க முடியவில்லை. எனவே மேற்படி இடத்தில் உள்ள வடிகட்டி தொட்டிகளில் உள்ள வடிகட்டும் பொருள் (கூழாங்கல், மணல்) வடிகட்டி தொட்டிக்கு சுற்றிலும் டைல்ஸ் பதித்தல் மற்றும் நீர் உறிஞ்சும் பைப்புகள் (Lateral pipes) வால்வுகள் ஆகியவைகளை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பணிகளை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.12,00,000/– இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் அனுமதி வழங்கலாம். **இ1/3094/12**

**375. அனுமதி வழங்கப்பட்டது.**